Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

[illegible] 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 27 (13 2 1991) வெள்ளிக்கிழமை ஓலை 298

## ஆசிரியர்களை தரப்படுத்தல் அதிகாரிகள் யோசனை

நாடெங்கிலுமுள்ள 1,80,000 ஆசிரியர்களைத் தரப்படுத்துவது பற்றி அதிகாரிகள் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்புதிய திட்டத்திற்கமைய உயர்தரத்தில் வைக்கப்படும் ஆசிரியர் நிர்வாக சேவை அதிகாரிகளின் சம்பளத்துக்குச் சமமான சம்பளத்தைப் பெறுவார்கள். தரம் ஒன்று ஆசிரியர் குறைந்தது 200 ரூபா மேலதிகமாகச் சம்பளம் பெறுவர். உயர்தரம் என்று கணிக்கப்படும் தரம் நான்கைச் சேர்ந்த ஆசிரியர் வருடமொன்றிற்கு 74 000 ரூபா சம்பளமாகப் பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தரத்துக்கமையவே பதவி உயர்வுகளும் வழங்கப்படவுள்ளன. (4ஆம் பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் டடா சட்ட அமுலாக்கல்

# ஜெயலலிதா மீது பலத்த கண்டனம்; போராட போவதாககட்சிகள் மிரட்டல்

(சென்னை)

தமிழகத்தில் பயங்கரவாதம் மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை (டடா) அ. தி மு. க. அரசாங்கம தவறானவழியில் பயன்படுத்திவருவதாக அரசியல் கட்சிகள் பலவும் கண்டனம் செய்துள்ளன. அதேவேளை இச்சட்டம் அமுல்படுத்தப்படுவதை மறுபரிசீலனை செய்து திரும்பப் பெறாவிடில் அதற்கெதிராகப் போராடவேண்டிவரும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் செல்வி ஜெயலலிதா தமது அரசியல் விரோதிகளுக்கு எதிராக டடா சட்டத்தைப் பயன்படுத்தி வருகின்றார். தற்பொழுது தமிழகத்தில் கைது செய்யப்படும் இலங்கைத் தமிழர்களும், புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கைது செய்யப்படுபவர்களும் இந்த டடா சட்டத்தைப் பயன்படுத்தியே கைது செய்யப்படுகின்றார்கள்.

இலங்கையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ஒத்த இந்த டடா சட்டம் இந்திய அரசிற்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடாத்தும் பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டதாகும்.

இச்சட்டம் தமிழ் நாட்டில் அமுலாக்கப்படுவதை திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் கழகம் மார்க் [illegible]

(4ஆம் பக்கம் பார்க்க)

## சவூதி அரேபியாவில் புலிகளுக்கு பயிற்சி

### -லக்ஷ்மன் ஜயக்கொடி

[கொழும்பு]

சவூதி அரேபியவுடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பிருப்பதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது. சவூதி அரேபியாவில் விடுதலைப் புலிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றதாம். இதுபற்றி விசாரிக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் சவூதி அரேபியா செல்லவிருக்கிறார் அல்லது சென்றிருக்கிறார் என அறிகிறோம். இதில் உண்மை நிலை எத்தகையது என்பதை அமைச்சர் கூற வேண்டுமென லக்ஷ்மன் ஜயக்கொடி [illegible]

வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் அவர் கலந்துகொண்டு பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அரசாங்கத் தரப்பினரின் பேச்சுக்களைப் பார்த்தால் இந்தியாவின் நல்லுறவை இவர்கள் விரும்புவதாகத் தெரியவில்லை. நரசிம்மராவ் சார்க் மாநாட்டுக்கு வரக் [illegible] (4ஆம் பக்கம் பார்க்க)

## குச்சவெளியில் மோதல்

திருமலை மாவட்டத்தில் குச்சவெளிக் குளக்கோட்டுப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். கடந்த ஒன்பதாம் திகதியன்று இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது இராணுவத் தரப்பினருக்கு ஏற்பட்ட சேதம் தெரியவில்லை. கொழும்பில் இராணுவத் தலைமையக வட்டாரங்கள் இம்மோதலை ஊர்ஜிதப்படுத்தின.

## மண்ணெய்

## பொங்கலுடன் போர் நிறுத்தமாம்; தினகரன் பத்திரிகை ஆருடம்

(கொழும்பு)

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தையொட்டி வடக்கு கிழக்கு பகுதியில் யுத்த நிறுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது என்று கொழும்பிலிருந்து வெளிவரும் தினகரன் பத்திரிகை முன்பக்கச் செய்தி ஒன்றைப் பிரசுரித்துள்ளது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது. இதொ கா தலைவர் என்ற முறையில் அமைச்சர் எஸ் தொண்டமான் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்து இருப்பதால் அக்காலத்தில் யுத்த நிறுத்தத்தை அமுலாக்கவும், ஆலோசிக்கப்பட்டுவருகின்றது பேச்சுவார்த்தைகள் சாதகமாகத் தொடரும் பட்சத்தில் இந்த யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் நீடிக்கலாமெனவும் குறிப்பிட்டுள்ளது.

திரு. தொண்டமானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் சமாதானத் தீர்வொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வந்திருப்பதும், [illegible] டின்போது இப்பேச்சுவார்த் [illegible]

[4ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுக்கு ஆதரவு வழங்கியதாக

புலிகளுக்கு ஆதரவு வழங்கியதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# டடா சட்டத்தை உடன் நிறுத்து; இல்லாவிடில் போராட்டம் தொடங்கும்

- கருணாநிதி

(சென்னை)

ஜெயலலிதாவின் அரசாங்கம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை (டடா) தவறாகப் பயன்படுத்துவதை உடன் நிறுத்திக் கொள்ளாவிட்டால் இந்தியாவின் சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் பேணிக் காக்க விரும்புவோர் அனைவரும் ஒன்று திரண்டு உரிமைப் போராட்டம் நடத்த வேண்டிய சட்டாயத்திற்கு தள்ளப்படுவார்கள் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சட்டத்தை தவறாக இஷ்டத்திற்கு பயன்படுத்துவதற்கு உடந்தையாகவுள்ள அதிகாரிகளும், கெவிசாரும் இந்தப் பயங்கரச் சட்டம் திரும்பிப் தாக்கும் வாய்ப்புள்ளதை மறந்துவிட்டு செயல்படுகிறார்கள். இது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# டடா சட்டத்தை திரும்ப பெற திராவிட கழகம் வற்புறுத்து

(சென்னை)

பயங்கரவாதம் மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் (டடா) சட்டத்தை மறுபரிசீலனை செய்து அச்சட்டத்தை திரும்பப் பெறவேண்டும் என்று திராவிடர் கழகத்தின் மத்திய நிர்வாகக் குழு தமிழக அரசை வலியுறுத்தியுள்ளது.

சென்னை பெரியார் திடலில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தில் மேலும் ஜனநாயக நாட்டில் இயல்பாக உள்ள சட்டங்களின் மூலமாகவே குற்றவாளிகளைக் கண்டறியவும் சட்டப்படி தண்டிக்கவும் வழிவகை உண்டு எனவும், இந்த நிலையில் டடா சட்டத்தை பயன்படுத்துவதை எந்த அரசும் நியாயப்படுத்த முடியாதெனவும், அதைப் பயன்படுத்துவதை மத்திய மாநில அரசுகளின் போக்கு கண்டிக்கத்தக்கது எனவும் கூறப்பட்டுள்ளது.

## மண்ணெய் விலையில் வீழ்ச்சி

மீண்டும் மண்ணெண்ணையின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. நேற்று யாழ் நகரிலும் சுற்றுப்புறங்களிலும் 1 போத்தல் மண்ணெண்ணை அதிகபட்சம் 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

அநேகமான வெளிக் கடைகளில் இருந்து குடாநாட்டிற்கு மண்ணெண்ணை பெருமளவில் எடுத்துவரப்பட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தபாலகத்தில் முத்திரை இல்லை

யாழ் மாவட்டத்தில் உள்ள தபால் நிலையங்களில் தபால் முத்திரைகள் முற்றாக தீர்ந்துவிட்டது.

நீண்டநாட்களாக இங்கு முத்திரைகள் அனுப்பிவைக்கப்படாமையால் இந்த நிலை தோன்றியிருக்கின்றது. ஆனால் தனியார் கடைகளில் முத்திரைகள் தாராளமாக கிடைக்கின்றது. இதனால் மக்கள் தபால் முத்திரைகளைப் பெறுவதற்கு மேலதிக பணம் செலவு செய்ய வேண்டியுள்ளது. (ச)

# பசறையில் சப். இன்ஸ்பெக்டர், மூன்று பொலிஸார் கைது

(பதுளை)

புலிகளுக்கு ஆதரவளித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பசறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு சப் இன்ஸ்பெக்டரும், மூன்று பொலிஸாரும் விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைதாகியுள்ள நால்வரும் தமிழர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கைதாகியதைத் தொடர்ந்து ஊவா மாகாணம் பதுளையில் தமிழர் குடியிருப்புக்களில் புதிதாக நடமாடும் தமிழர்களைப் பொலிஸார் தேடிவருவதாகச் சொல்லப்படுகிறது.

ஏற்கனவே கைதாகிய ஒருவர் வழங்கிய தகவலையடுத்தே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர் பலமயம் தவறிமாறு தோட்ட நிர்வாகத்துக்கு பதுளைப் பொலிஸ் பணித்துள்ளது. தோட்டங்களில் வெளியாரின் நடமாட்டம் பற்றியும் உடனடியாக அறிவிக்குமாறும் பொலிஸ் தோட்ட நிர்வாகத்தைக் கேட்டுள்ளது.

பதுளைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தொகுதிகளாவும் (எஸ். பி.) ஆர். எம். கருண ரெத்னாவும் (ஏ. எஸ். பி.) விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பில் 4 புலிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சித்தாண்டி என்னுமிடத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலின் போது விடுதலைப் புலிகளைச் சேர்ந்த நால்வர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

கப்டன் சந்துரு (செல்லப்பா இருதயராசா கொக்குவில்), பிரசாத் (கந்தசாமி சந்திரகுமார்), ராஜா (பெரியதம்பி நடராசா, இருதயபுரம்), கண்ணா (பொன்னுத்துரை தேவராசா திருக்கோணமலை வீதி மட்டக்களப்பு) ஆகியோரே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## கருணாநிதிமீது விசாரணை; கட்டம் நெருங்கிவிட்டது

- அரங்கநாயகம்

(சென்னை)

பத்மநாபா கொலை தொடர்பான வழக்கு விசாரணை தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி விசாரணை செய்யப்படவேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டதாக அ. இ. அ. தி. மு. க. தலைமை நிலையச் செயலாளர் அரங்கநாயகம் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ராஜீவ் காந்தி கொலையில் தி. மு. க.வைச் சம்பந்தப்படுத்த எடுத்தமுயற்சியில் தோல்வி கண்டுவிட்டதாலேயே பத்மநாபா கொலை வழக்கு விசாரணை எனக் கூறிக்கொண்டு தி. மு.கவை இழிவுபடுத்த தமிழக அரசு முயல்வதாக தி. மு. க. தலைமை நிலையப் பேச்சாளர் ஆற்காடு வீராசாமி தெரிவித்தார்.

# வீதி விபத்துக்களைத் தடுக்க புதிய ஒழுங்கு விதிகள்

- தமிழீழ காவல்துறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் குடாநாட்டில் துவிச்சக்கர வண்டிகளின் பயன்பாடு கணிசமாக அதிகரித்துள்ளமையால் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. வீதி விபத்துக்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும், இவ்வாறான விபத்துக்களைத் தடுக்கவும், வீதிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு தமிழீழ காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவினர் சில வீதி ஒழுங்கு முறைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் உட்பட அனைவரும் துவிச்சக்கர வண்டிகளில் பயணம் செய்து வருகின்றனர். இந்நிலையில் விபத்துக்களைத் தவிர்க்க ஒழுங்குபடுத்துவதற்காக கீழ்வரும் ஒழுங்குவிதிகளை கடைப்பிடிக்கும்படி அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிலக்கண்ணியில் சிக்கி 5 புலிகள் வீரச்சாவு

(நமது நிருபர்)

மன்னார் மாவட்டம் வேப்பங்குளம் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் வைத்த கண்ணிவெடியில் சிக்கி விடுதலைப் புலிகள் ஐவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்

மேஜர் தமிழ்ப்புலி அல்லது நிச்சாமி (முத்துசாமி தர்மராசா, பெரியபுதுமலை) லெப். இனியன் அல்லது நஸ்ரின் (முத்தையா இராமசாமி, தாந்தாக்குடி, இந்தியா), லெப். ரூபா (அருணாசலம் அமுதன், தாராபுரம், மன்னார்), வீரவேங்கை குமரன் (தங்கவேல் சுகுமார், தேவிபுரம், புதுக்குடியிருப்பு), புண்ணியன் அல்லது அன்போசிட் (சிமோன் கிறிஸ்டி தேவசெல்லு யோகராசனும், மன்னார்) ஆகியோரே இச்சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**தவறி விட்டது**

முக்கிய பட்டிகள் அடங்கிய புகைப்படச்சுருள் 2.12.91 பலாலி வீதியில் (யாழ். திருநெல்வேலி) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கமலாவதி 4/2 கன்னாதிட்டி [illegible] தயவு செய்து ஒப்படைக்கவும். (R/1997)

**நீர்.தூபம்**

இரவில் ஆழ்ந்த உறக்கம் கொள்ள உதவுகிறது உறக்கம் கெடுக்கும் நுளம்பினை விரட்டிட இரவில் நீர் தூபம் புகையுடன் இயற்கைத் தூபம். ஒரு பைக்கற் விலை ரூபா. 3/- அண்ணா கோப்பிக்கடைகளிலும் கிடைக்கிறது. [illegible] (B/3617)

**A/L இரசாயனம்**

A/L பௌதிக இரசாயனம் ஆரம்பம்: 14-12-91 சனி 2.30 P M ஆசிரியர் சதீஸ் 108, பிறவுண் வீதி யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு 2.30P M (R/1994

## வாராந்த கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக் கிழமைதோறும் இடம்பெற்று வரும் வாராந்தக் கருத்தரங்கு வரும் ஞாயிற்றுக்கிழமை 15 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள இப்பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

இவ்வார அமர்வில் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் 'எனது நாடக வாழ்க்கை அனுபவங்கள்' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார். அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு இக் கழகம் கேட்டுள்ளது.

## உதை பந்தாட்டப் போட்டி

# வன்னிப் பிரதேசத்தில் மாரிமழை குறைவு

வன்னிப்பகுதியில் இம்முறை மாரிமழை குறைவாகப் பெய்துள்ள காரணத்தினால் குளங்களில் போதியளவு நீர் இல்லை. இதன் காரணமாக காலபோக வேளாண்மைச் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மட்டும் பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு தரிசாக விடப்பட்டுள்ளது.

உழுந்து, பயறு, கௌபி போன்ற பயிர்ச்செய்கை கூட மிகக் குறைந்தளவே செய்யப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் பல இடங்களில் கிருமிநாசினி, களைநாசினி போன்றவற்றிற்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. (தி)

# கட்சி உறுப்பினர்களுக்கு கட்டுப்பாடுகள் உண்டு

-கே. எம். சொக்ஸி

ஐ. தே. க. அங்கத்தவர்கள் கட்சிக் கொள்கைகளுக்கும், ஒழுக்கங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்கள் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சட்டத்தரணி கே. எம். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இதனை கே. எம். சொக்ஸி தெரிவித்தார்.

# பொது செலாவணி அமைக்க ஐரோ. சமூகம் உடன்பாடு

(லண்டன்)

பன்னிரண்டு உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய சமூகம் பொதுச் செலாவணியொன்றை உருவாக்க உடன்பட்டுள்ளது.

ஒற்றைச் செலாவணிமுறைக்கான எதிர்ப்பை பிரித்தானியா கைவிட்டதை அடுத்து ஐரோப்பிய சபைக் கூட்டத்தில் இந்த உடன்பாடு ஏற்பட்டது.

இந்த உடன்பாட்டின்படி ஒற்றை ஐரோப்பியச் செலாவணி 1999 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி புழக்கத்திற்கு விட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


## பாக்போஷா

- முழுக் குடும்பத்திற்குமுரிய சுவையான சத்துணவு
- புழுக்கொடியலோடு ஊட்டச்சத்து மிக்க பயறு, உழுந்து, சோயா மற்றும் அரிசி ஆகியன சேர்க்கப்பட்டு சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.
- காலை மாலை உணவாகவோ, சிற்றுண்டியாகவோ உண்டு மகிழக்கூடியது.


ஒலிபரப்புத்துறை

# கருத்திட்ட அமைச்சராக ஹட்சன் சமரசிங்கா

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும், பணிப்பாளர் நாயகமுமாக இருந்த ஹட்சன் சமரசிங்கா ஒலிபரப்புத்துறை கருத்திட்ட அமைச்சராக நியமிக்கப்படலாம் என கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹட்சன் சமரசிங்க முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் பாராளுமன்ற தொகுதிக்கு ஐ.தே.க வின் சார்பாக எம்.பி.யாக நியமனம் பெற்றவர் என்பது தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்தே இவருக்கு அமைச்சர் பதவியும் கிடைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் ஹட்சன் சமரசிங்கா வகித்த பதவிகளுக்கு இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவராக லலித் எஸ். மைத்திரிபாலவும், பணிப்பாளர் நாயகமாக விஜய கொரயாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

லலித் எஸ். மைத்திரிபால முன்பு சிங்கள வர்த்தக ஒலிபரப்பு கட்டுப்பாட்டாளராக இருந்து ஓய்வு பெற்றவர். விஜய கொரயா முன்பு அறிவிப்பாளராக பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வ.செ.திட்ட ஆலோசனைகள் உண்மைக்குப் புறம்பானவை

(கொழும்பு)

பல திணைக்களங்களால் தயாரிக்கப்படும் வரவு செலவுத்திட்ட ஆலோசனைகள் உண்மைக்குப் புறம்பான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்று பொது கணக்குக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நிதிக் கணக்குகளைத் தயாரிக்கும் அதிகாரிகளின் அறிக்கைகளில் முகாமைத்துவக் குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும், அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் நிதியைத் தவறான வழிகளில் கையாள வழி கோலுகிறது என்றும் குழு அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

1989ஆம் ஆண்டுச் செலவுத்திட்டத்தில் செலவினங்களின் அதிகரிப்பு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஈ. பி. போல் பெரேரா தலைமையில் நியமிக்கப்பட்ட பொது கணக்குக் குழு அதன் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பொருத்தமற்ற அறிக்கைகள், உள்ளகக் கணக்காய்வில் உள்ள குறைகள், மேலதிகச் செலவினங்கள் போன்ற குறைபாடுகள் பற்றி அரசாங்கம் கவனமெடுக்கவேண்டும் என்று அந்த அறிக்கை எச்சரிக்கிறது.

# தேயிலை விலை வீழ்ச்சி

## தொழிற்சாலைகள் மூடப்பட்டன

தேயிலை விலையில் ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சியால் சப்பிரகமுவா மாகாணத்தில் தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளனவாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தொழில் [illegible] யாகத் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தாய்க்கு மகனாக

03 - 04 - 1962

தமிழ்தாய்க்கு மகனாக

17 - 09 - 1991

### லெப். கேணல் ஜஸ்ரின்

(பொன்னுச்சாமி பாஸ்கரன்)

- சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவின் 3 ஆம் தளபதி -

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிறு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் தெற்கு, இணுவில். -குடும்பத்தினர்

(B/3626)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 12 - 13**

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், முருங்கன் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மெதடிஸ்த திருச்சபைப் பாதிரியார்,

## உதை பந்தாட்டப் போட்டி

[சச்சமோட்டை]

கடற்புலிகளின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி சென்ற புதன்கிழமை மாலை ஷூர் சென். ஆனிஸ் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

முதல் ஆட்டத்தில் சென்றோக் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய பாடுமீன் கழகத்தினர் 5.0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றனர். பின் 2ஆவது ஆட்டத்தில் பங்குபற்றிய தொடர்மாடி விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஆடிய கௌடி கழகத்தினர் 2:2, 3:3 என்ற வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர். இப்போட்டியை பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தனர். போட்டி தொடர்ந்து நடைபெறும்.

[43]

...படி தயாரிக்கப்பட்டது.

- காலை மாலை உணவாகவோ, சிற்றுண்டியாகவோ உண்டு மகிழக்கூடியது.

'பாம்பே-ஷா' சகல கற்பகம் விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றது.

தொடர்பு:- சந்தைப்படுத்தும் பகுதி,
பனை அபிவிருத்திச்சபை,
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(B/3622)

## தரமான மாட்டுத்தீவனம்

பல்வேறு தானியங்கள் சேர்க்கப்பட்டு, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட கறவை மாட்டுத்தீவனம் சகல 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

விலை: கிலோ ரூபா 2/- மட்டும்
(மொத்தக் கொள்வனவிற்கு கழிவு வழங்கப்படும்)

தொடர்பு:- சந்தைப்படுத்தும்பகுதி
பனைஅபிவிருத்திச்சபை,
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(B/3621)

ஸ்ரீதர் திரையரங்கில்
அல்ஜீரிய நாட்டு
## விடுதலைப் போராட்டம்
[தமிழாக்கம் செய்யப்பட்டது]
தினசரி 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)

...ணத்தில் தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலை தொடருமானால் அனைத்துத் தேயிலைத் தொழிற்சாலைகளும் மூடப்படுவதோடு, பாரிய பொருளாதார விளைவுகளும் ஏற்படும் என்றும், உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் தனி சாவுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

தேயிலை வியாபாரத்தில் அண்மையில் ஏற்பட்ட மந்த நிலையினால் தென் மத்திய, ஊவா மாகாணங்களிலும் தேயிலைத் தொழிற்சாலைகளை மூடவேண்டி ஏற்படலாம் என்றும் அந்த மகஜரில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது

### காஷ்மீர் விவகாரம்

# இந்தியா நடத்தைக்கு அரபுக்கள் கண்டனம்

(டாக்கா)

ஜம்மு-காஷ்மீரில் முஸ்லிம்கள் மீது வன்முறை இழைக்கப்படுவதாக 45 நாடுகளின் இஸ்லாமிய ஸ்தாபன மாநாட்டின் வெளிநாட்டு அமைச்சர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நிலைமையை நேரில் அறிந்து வர தூதுக்குழு ஒன்றை அனுப்புமாறு ஸ்தாபன பொதுக் காரியதரிசியை அமைச்சர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றைப் பாகிஸ்தான் தயாரித்துள்ளது இஸ்லாமிய மாநாட்டில் இத்தீர்மானம் நிறைவேற்றப்படும் என நம்பப்படுகிறது.

காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாலும், சர்வதேச மனித உரிமைக்குழுவை காஷ்மீரில் அனுமதிக்குமாறும் அது கோருகிறது.

# திபெத்திய அகதிகள் டில்லியில் கைது

சீனப் பிரதமர் லீ பெங்கின் இந்திய விஜயத்தை ஒட்டி புதுடில்லியிலுள்ள திபெத்திய அகதிகள் முகாமிலிருந்து ஐந்நூறு ஆதரவு தீவிரவாதிகளை டில்லி பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஜனநாயக ஆதரவு திபெத்திய அகதிகளை இந்தியா ஏற்றிருந்ததுடன் அவர்களுக்கான ஆதரவையும் இதுவரை அளித்திருந்தது. அத்துடன் திபெத்திய தலைவர் தலாய்லாமாவும் இந்தியாவிலேயே உள்ளார்.

இந்தியாவிலுள்ள 1,00000 அகதிகளில் உள்ள சிலர் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கக்கூடும் என்பதாலேயே இவர்களை கைதுசெய்ததாக இந்திய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## ஞாயிறு கப்பல் வரலாம்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் கப்பல் ஒன்று வரும் ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது இங்கு தரித்து நிற்கும் 'ஹெந்தல' என்ற கப்பல் இன்று புறப்பட்டுச் செல்லும் எனவும் கூறப்படுகின்றது. [ஈ]

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், முருங்கன் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மெதடிஸ்த திருச்சபைப் பாதிரியார், அவரது வாகனச் சாரதி உட்பட 3 தமிழர்கள்

1986 ஆம் ஆண்டு அம்பாறை, கஞ்சிகுடிச்சாற்றுப் பகுதியில் தேசத்துரோகிகளால் கொலை செய்யப்பட்ட

**விஜயன்** (தம்பிராசா முத்துலிங்கம் - விநாயகபுரம், திருக்கோயில், அம்பாறை)

மன்னார், பெரியமடுப் பகுதியில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய

**2 ஆம் லெப். சிறீ** (ஆரோக்கியம் ஜோன் சின்னா - கொவ்வங்குளம், மன்னார்)

1988 ஆம் ஆண்டு அம்பாறை, பொத்துவில், சலுவாங்கரைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சந்திரன்**

கிளாலியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**ஜோதிரவி** (சண்முகம் வேல்ராஜ், அல்லிப்பளை, பளை)

1990 ஆம் ஆண்டு பளைமடுவில் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கியதில் சாவடைந்த;

**நிதன்** (கனகரத்தினம் சந்திரன், கன்குடாவெளி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B/3206)

## ✻ சிந்தனைக்கு ✻

சுதந்திரத்தில் பற்றுக் கொண்டவர்கள்,
சுதந்திரம் அடைவார்கள் என்பது உறுதி.

- எட்மண்ட் பர்க்


# ஈழநாதம்

மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 13-12-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05


## மிட்டாய் கொடுத்து பிள்ளை பிடிக்க திட்டம்

மன்னார் தீவுப் பகுதி, யாழ் குடாநாட்டை அண்டியுள்ள தீவுப்பகுதி, மற்றும் வவுனியாவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்கள் மீதான தடை விரைவில் நீக்கப்படும் எனப் புனர்வாழ்வு அமைச்சர் பி தயாரத்னா அறிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தப் பகுதிகளுக்கு மின்சார விநியோகம் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், சிவில் நிர்வாகத்தை தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகவும், அப்பகுதியில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறான அரச தரப்புச் செய்திகளுக்கு கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளும் பெரும் முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகள் வெளியிட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழரின் உரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, இங்கு மின்சாரம் இருந்தது, நீர் விநியோகம் இருந்தது பஸ் வண்டி, புகையிரதங்கள் ஓடின பாடசாலைகள் இயங்கின, பரீட்சைகள் நடந்தன, நிர்வாக இயந்திரமும் சீராக இயங்கியது. சோப்பும் மண்ணெண்ணெயும் சீராகக் கிடைத்தன. இவற்றிற்காகப் போராட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. தமிழரின் மறுக்கப்பட்ட அரசியல் உரிமைக்காகவே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது தமிழர் இனரீதியாக ஒடுக்கப்பட்டார்கள், தமிழரின் பொருளாதாரமும் உரிமைகளும் காலத்திற்குக் காலம் பேரினவாத சக்திகளினால் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. தமிழர்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. இவ்வாறான அடக்கு முறைகள், [illegible]

# தெற்காசிய ஒத்துழைப்பில் அரசிற்கு அக்கறையில்லை

— அநுரா பண்டாரநாயக்கா

(கொழும்பு)

இன்றைய அரசாங்கம் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பில் ஒருபோதுமே அக்கறையுடன் செயற்படவில்லை. கொழும்பில் கடந்த மாதம் 'சார்க்' உச்சி மாநாட்டை நடத்த முடியாமல் போனதற்கு அரசாங்கத்தையே குற்றஞ் சாட்ட வேண்டும் என அநுரா பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாயன்று பாராளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோதே இதனை அவர் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்;

அரசாங்கம் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பில் அக்கறையுடன் செயற்படவில்லை. இன்றைய ஜனாதிபதி அன்று பிரதமராக இருந்தபோது மலேசியாவிற்கு சென்ற வேளையில் தென் கிழக்காசிய நாடுகள் சங்கத்தில் (ஆசியான்) உறுப்புரிமை பெற இலங்கை தயாராயிருக்கிறது என்று பிரகடனம் செய்தார். அன்றைய பிரதமர் லீ குவான் யூவும் வெளியுறவு அமைச்சர் இராஜரத்தினமும் திரு பிரேமதாசவிற்கு ஓர் உறைப்பான பூமிசாஸ்திர பாடத்தை கற்பித்தனர். இலங்கை எந்த வகையிலும் தென்கிழக்காசியாவுக்கு சொந்தமானதல்ல. அது தெற்காசியாவின் தவிர்க்க முடியாத பகுதியாகும் எனக் கூறினர்.

கடந்த சனியன்று வவுனியாவில் பேசிய ஜனாதிபதி உள்வீட்டுப் பிரச்சினையில் அயலவர் தலையிட வேண்டியதில்லை நாமே பிரச்சினையை தீர்த்துக் கொள்வோம் என்று கூறியிருக்கிறார். எமக்கும் இந்தியாவிற்கும் இடையே பெரியதோர் பிரச்சினை இருக்கிறது. அதை மூடி மறைக்க முடியாது. இலங்கையில் இருந்து சென்ற இரண்டு லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் இந்தியாவில் இருக்கிறார்கள். இது ஒரு இந்தியப் பிரச்சினை ஆகிவிட்டது. இலங்கை அகதிகள் இந்தியாவிலிருக்கும் வரை இந்தியாவை இனப் பிரச்சினை விவகாரத்தில் ஒதுக்கிவிட முடியாது என்றும் அநுரா தனது உரையில் குறிப்பிட்டார்.

## காவிரி நீர்ப்பிரச்சினை

# நடுவர் மன்றத்தீர்ப்பு கசற்றில் வெளிவந்தது

(டில்லி)

காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பாக காவிரி நடுவர் மன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவை மத்திய அரசு கசற்றில் வெளியிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை லோக்சபாவில் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் வி. சி. சுக்ளா இதனைத் தெரிவித்தார். இது தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பித்து லோக்சபையில் உயர் நீதி மன்றத்தின் ஆலோசனையை அடுத்து இடைக் [illegible] வும் இருக்காது என்றும் சுக்ளா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் லோக்சபா கூடியபோது இடைக்காலத் தீர்ப்பு கசற்றில் வெளிவந்தது தொடர்பாக கர்நாடகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடும் கூச்சலிட்டுச் சபை நடவடிக்கைகளைக் குழப்பினர். இதனால் சற்று நேரம் சபை ஒத்திவைக்கப்பட்டது

இதேநேரம் தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா மத்திய அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அதில் அவர் [illegible]

## யாப்பில் திருத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாப்பில் முக்கிய திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

யாப்பில் மாற்றங்களைச் செய்வதற்கு லக்ஷ்மன் ஜெயக்கொடியும், இங்ஸ்லி விக்கிரமரட்ணவும் நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

# ஸ்திரமற்ற உலக நிலையில் எனது இந்திய பயணம்

- லீ பெங்

(பீஜிங்)

என்ன நிகழுமென்று எதிர்வு கூறவியலாத உலக நிலைமை ஒன்றின் பின்னணியில் இந்த இந்திய சுற்றுப் பயணத்தை மேற்கொள்கின்றேன் என சீனப் பிரதமர் லீ பெங் கூறியுள்ளார்.

இந்தியாவிற்குப் புறப்படுவதற்கு முன் பீஜிங்கில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் பேசுகையில் தமது இந்திய விஜயத்தின் மூலம் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டார். இன்னும் சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை இனியும் மறைக்க வேண்டியதில்லை எனக் கூறியிருக்கும் லீ பெங், ஒரு பிரதமர் விஜயம் செய்வதன் மூலம் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என எதிர்பார்க்கவும் முடியாது எனவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுக்கும், பர்மாவுக்கும் சீன ஆயுதங்கள் பெருமளவு சென்றதை இந்தியா விரும்பவில்லை. திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவிற்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் இந்தியா புகலிடம் அளிப்பதைச் சீனா விரும்பவில்லை. எனினும் என்னுடைய இப்பயணம் சீன - இந்திய உறவுகளின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் அனுகூலமான ஆக்கபூர்வமான தாக்கமொன்றை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளின் மேம்பாடு வேறு எந்த ஒரு நாட்டிற்கும் எதிரானதாக அல்ல எனவும் லீ பெங் குறிப்பிட்டுள்ளார்.

# கொர்பசேவ் இராஜினாமா; காலம் நெருங்குகிறது

(மாஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் தனது பதவியை இராஜினாமாச் செய்யும் கட்டத்தை அடைந்திருப்பதாக மாஸ்கோ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ரஷ்யா, உக்ரைன், பைலோரஷ்யா ஆகிய மூன்று பலம் வாய்ந்த குடியரசுகளும் காமன்வெல்த் அமைப்பை உருவாக்கிய பின் சோவியத் [illegible] வேனியா ஆகிய குடியரசுகளும் காமன்வெல்த் அமைப்பில் சேர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

சோவியத் நாட்டில் உள்நாட்டுப் போர் ஒன்று வெடிக்கும் அபாயம் தோன்றுவதாக அமெரிக்க சி ஐ ஏ உளவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சோவியத்தின் நிலைமை குறித்து சீனாவும் எச்சரி [illegible]

தமிழரின் பொருளாதாரமும் உரிமைகளும் காலத்திற்குக் காலம் பேரினவாத சக்திகளினால் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. தமிழர்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. இவ்வாறான அடக்கு முறைக்கும், ஒடுக்கு முறைக்கும் எதிராகவே போராட்டங்கள் கிளம்பின. இவ்வாறான அடக்கு முறைகள், ஆக்கிரமிப்புக்கள் தொடராமல் தடுப்பது போராட்டத்தின் நோக்கமாகவே இருந்தது.

ஆனால், போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் சிறிலங்கா பேரினவாத அரசாங்கம் இன ஒடுக்கு முறைக் கொள்கையையோ அன்றி, ஆக்கிரமிப்பு நடவடிக்கையையோ நிறுத்தவில்லை. தமிழரின் உரிமைகளை மதிக்கவுமில்லை. மாறாக, இராணுவ அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டது. இனப்படுகொலை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் என்ற நோக்கில் செயற்பட்டுவருகிறது. ஆனால், பேரினவாத அரசாங்கம் எதிர்பார்த்தது போல போராட்டம் தணிவதாகத் தெரியவில்லை. மாறாகத் தீவிரமடைந்தது.

இந்நிலையில், தமிழர் பொருளாதாரத்தை திட்டமிட்டு அழிப்பதன் ஊடாக போராட்டத்தை அழிப்பதில் பேரினவாத அரசாங்கம் தீவிர கவனம் எடுத்தது. போக்குவரத்தை தடை செய்து மின்சார விநியோகத்தை நிறுத்தியது. எரிபொருள்கள் எடுத்துவர தடை விதித்தது. அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தை திட்டமிட்டு தடை செய்தது. மருந்துப் பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதித்தது. இதேவேளை, பாரிய குண்டு வீச்சுத் தாக்குதல்கள், பீரங்கித் தாக்குதல்கள் என்பனவற்றால் தமிழர் உடைமைகளை அழித்தது. இராணுவம் பிரவேசித்த பகுதிகளில் இருந்த தமிழரின் உடைமைகளை சூறையாடியது. மிகுதிக்குத் தீவைத்தது.

இவ்வாறாக தமக்குக் கிடைக்காத தமது நியாயபூர்வமான உரிமைகளைத் தமிழர் கேட்டார்கள் என்பதற்காக அவர்களிடம் இருந்து சொத்துடைமைகள், வசதிகள் என்பனவற்றைக் காட்டுமிராண்டித்தனமாக அழித்த சிறிலங்கா பேரினவாத அரசாங்கம் தற்பொழுது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் சோப்புத் தருகிறேன்; சீப்புத் தருகிறேன் என கூவி அழைக்கின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த அழைப்பானது, தமிழரின் போராட்டம் சோப்பு, சீப்புக்காக நடந்தது போலவும், இராணுவம் நிலை கொண்டுள்ள இடங்களில் அவை தாராளமாகக் கிடைக்கின்றன என்பது போலவும் உள்ளது. அதாவது தமிழரின் தேசிய போராட்டத்தைக் கொச்சைப்படுத்துமாப் போல் உள்ளது. மிட்டாய் கொடுத்து பிள்ளையைக் கடத்தும் மோசடிக்காரனின் ஏமாற்று நடவடிக்கையை ஒத்துள்ளது. இதற்கு ஏமாற தமிழ் மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல.

---

அறிக்கையொன்றை சமர்ப்பித்த வேளையில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையை அறிந்து இடைக்கால உத்தரவை செ[illegible]டுத்த ச[illegible]றில் வெளியிட வேண்டியது கட்டாயமாகிறது என்று தெரிவித்தார்.

இந்த ஆண்டு காவிரி கிடைக்கும் தண்ணீரின் அளவை அரசு பரிசீலனை செய்ததாகவும் முன்னைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு திருப்திகரமாக இருப்பதால் இடைக்காலத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ள தண்ணீரை திறந்து விடுவதில் சிரமம் எது மத்திய அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அதில் அவர் "தமிழர்களின் நியாயமான நலன்களை பிரதமர் பி.வி. நரசிம்மராவ் காப்பாற்றியிருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார், அதிமுக பாராளுமன்றக் கட்சித் தலைவர் இ. சுவாமிநாதன், மக்கள் அவைத் தலைவர் நாராயணனும் வரவேற்றுள்ளனர்.

---

[illegible] ரஷ்யா ஆகிய மூன்று பலம் வாய்ந்த குடியரசுகளும் காமென்வெல்த் அமைப்பை உருவாக்கிய பின் சோவியத் நாடு என்ற ஒன்று இருந்ததா என்ற சந்தேகமும் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ளது.

அத்துடன் ஆர்மேனியா, எஸ்தோனியா, லித்து[illegible] ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சோவியத்தின் நிலைமை குறித்து சீ.ஐ.ஏ. வும் எச்சரித்திருப்பதுடன், சோவியத்தின் இறுதி நிலைமை என்னவாகும் என்பதை கணிக்க முடியவில்லை என்றும் சீ.ஐ.ஏ. பிரதம[illegible] தெரிவித்திருக்கிறார்.

# தீவகப் பகுதிக்கென சிறிய நிர்வாக அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் சிறிய நிர்வாக அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு சிறிலங்கா அரசு தீவிர முயற்சி எடுத்து வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியை ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக [illegible] பாடசாலைகள், தபாலகங்கள், வைத்தியசாலை ஆகியவற்றுடன் தீவகம் முழுவதுமான மின்சார வசதி, படகுசேவை, பஸ் போக்குவரத்து ஆகியவற்றையும் ஏற்படுத்துவதற்கும் சிறிலங்கா அரசு முயற்சித்து வருகிறதாம்.

தீவகத்துக்கான உதவி அரசாங்க அதிபரை நியமிப்பதற்கு மட்டக்களப்பில் இருந்து ஒரு உத்தியோகத்தர் அழைத்து வரப்பட்டதுடன் அப்பகுதியில் இருந்தே ஒருவரும் தெரிவு செய்யப்பட்டு இருவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது. பிரதேசபா அதிபராக பஞ்சோதி என்பவரும் உதவி வைத்திய அதிகாரியாக திரு பாலசுப்பிரமணியமும் நியமிக்கப்பட்டு இவர்களின் கீழ் சம்பந்தப்பட்ட சேவைகள் நடைபெறுகின்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவகத்திற்கான மின்சார விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதேவேளை இப்பகுதிகளுக்கான ஏனைய நியமனங்களுக்காக ஒய்வுபெற்றவர்களிடம் இருந்தும் க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவு செய்யப்படுவோர் விரைவில் ஆசிரியர்களாகவும் ஏனைய சேவைகளிலும் நியமிக்கப்படவிருக்கின்றனர். அத்துடன் தீவுகளுக்கிடையிலான படகு சேவையும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக தீவகப் பகுதி செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

# அரசாங்கத்தின் நடத்தை அரசசார்பற்ற நிறு. அதிருப்தி

(கொழும்பு)

அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான சிறிலங்கா அரசின் நடைமுறைக் கொள்கை அந் நிறுவனங்களை ஆத்திரமூட்டச் செய்திருப்பதோடு அண்மைக் காலத்தில் சிறிலங்காவுக்கான உதவிகளை நிறுத்தி விடப் போவதாக அவை எச்சரித்துள்ளமைக்கும் காரணம் எனத் தெரியவருகின்றது.

நாட்டில் இயங்கி வரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சில அரசுக்கெதிராக இயங்குவதாகவும், பெரும் மோசடிகளில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கூறி அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களையும் விசாரணை செய்வதற்கு விசேட விசாரணைக் கமிஷன் ஒன்றை சிறிலங்கா அரசு நியமித்திருப்பது இந்நிறுவனங்களை ஆத்திரமூட்டியிருக்கின்றது.

இதேவேளை அரசாங்கத்தின் இந்த வடிக்கைக்கு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசுக்கெதிராக செயற்படுவதாகவும், சில அரசசார்பற்ற நிறுவனங்கள் நிவாரண நடவடிக்கை என்ற போர்வையில் மதமாற்ற விவகாரங்களில் ஈடுபடுவதுமே அரசாங்கம் அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்குக் காரணம் எனவும் தெரியவருகின்றன. இக்காரணங்களால் சிறிலங்கா அரசுக்கும் பல சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களுக்குமிடையிலான உறவில் விரிசல் நிலை நிலவிவருகின்றது (க)

# வெளியேற்றப்பட்ட எம்.பிகள் வழக்கு தாக்கல்

ஏழு இவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றியது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஆரியரட்ண ஜெயதிலக்கவும், பொலநறுவை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எச்.ஏ. முத்துபண்டாவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

டிசம்பர் 6 ஆம் திகதி கூடிய ஐ.தே. கட்சி செயற்

---

# திருவெம்பாவை

திருவெம்பாவை பூஜை இன்று ஆரம்பமாகிறது. இதனையொட்டி கொழும்புத்துறை மேற்[illegible] ஆலயத்தில் அதிகாலை 5.00 மணிக்கு அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகி தொடர்ந்து இம்மாதம் 22 ஆம் திகதிவரை இப்பூசை இடம்பெறும். [43]

# காவிரிநீர் பிரச்சினை தொடர்பாய் கர்நாடக அரசு பதவி விலகும்?

(பெங்களூர்)

காவிரிநதி நீர்ப் பிரச்சினை தொடர்பான நடுவர் மன்றத் தீர்ப்பினை மத்திய அரசு ஏட்டில் வெளியிட்டது தொடர்பாக கர்நாடக முதலமைச்சர் எஸ் பங்காரப்பா உட்பட மாநில சட்டப் பேரவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தேவையேற்பட்டால் பதவி விலகத் தயாராக இருக்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அரசாங்கத்தின் அறிவித்தலால் எழுந்த நிலைமையைப் பரிசீலனை செய்ய முதலமைச்சர் எஸ் பங்காரப்பா தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம், இது குறித்து லோக்சபாவில் விவாதிக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது விவாதம் நடத்துவதின் மட்டுமன்றி பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணவும் அரசு ஆர்வம் கொண்டிருக்கிறது என்று பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கர்நாடகத்தின் பல மாவட்டங்களில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் மாநில அரசு இன்று மாநிலம் தழுவிய 'பந்த்' ஒன்றை நடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இதையொட்டி கர்நாடக மாநிலத்தில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒருநாள் கால விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜீவ் கொலையில் அரசின் நிலை

# மக்கள் நலன் கருதி வெளியிட முடியாது

— ஜேக்கப்

(டில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை பற்றிய விசாரணை நடத்தும் நீதிபதி எம். ஜெயின் தலைமையிலான விசாரணைக் குழுவிற்கு கொலைச்சதி, அதன் பின்னணி, தொடர்புகள் ஆகிய அனைத்தும் தெரிவிக்கப்படுகின்றன, ஆனால் இது குறித்து அரசின் நிலையை மக்களின் நலன் கருதி அரசு வெளியிட இயலாது என மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் நேற்று இந்திய பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

எழுத்து மூலமாக அளித்த பதில் ஒன்றில் மேலும் அவர் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவரின் நேரடியான மேற்பார்வையின் கீழும் வழிகாட்டுதலின் கீழுமே முன்னாள் பிரதமர் ராஜீவின் கொலை நிறைவேற்றப்பட்டது என இலங்கைப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளை அரசு கவனித்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

# ஒரு வாரம் மட்டுமே நிவாரணம் வழங்க முடிவு

அவிசாவளை கிழக்கு பகுதியில் அண்மையில் நடைபெற்ற இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒரு வாரம் மட்டுமே உலர் உணவு வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இவ் விடயம் தொடர்பாக யாழ் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

இடம் பெயர்ந்த இம் மக்களுக்கு தொடர்ச்சியாக உலர் உணவு வழங்குவதற்கு உணவுப் பொருட்களின் கையிருப்பு இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பாராளுமன்றத்தில்

# இ. தொ. கா. மூன்றாம் இடம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சி நிலவரங்களில் தற்போது மூன்றாவது பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்ட கட்சியாக விளங்குகின்றது என இக்கட்சியின் தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய போதே எஸ். தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

### பொங்கலுடன்

ஜனாதிபதி நடாத்தவிருக்கும் மாநாட்டுடன், வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாக அரசியல் அவதானிகள்

### விதி

★ நாம் வீதிகளில் நடமாடும் வாகனங்களில் செல்லும்

## ஜப்பான் 65 கோடி ரூபா மானிய உதவி

(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு 65 கோடியே 50 லட்சம் ரூபாவினை மானியக் கொடையாக வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் உயிரியல், மருத்துவ, பொறியியல் சேவைக்கும், இறந்தவர்களைக் கழகத்தில் வைப்போர், மாரிப்போர் நிலையத்தை நிறுவுவதற்கும், சமூக நிவாரண மானியத்திற்கும் என மூன்று கொடைகள் மொத்தமாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய எம். பிகள் நேற்று சத்தியப் பிரமாணம்

(கொழும்பு)

ஐ. தே. க. வின் எம். பி. பதவியை இழந்த எட்டுப் பேருக்கும் பதிலாக நியமிக்கப்பட்ட புதிய எட்டு எம். பிகளும் நேற்று காலை பாராளுமன்றத்தில் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து தமது பதவிகளை ஏற்றுக்கொண்டனர்.

மஹனுவர மாவட்ட எம். பிகளான் சேனனி, அப்புஹாமி, நுவரெலியாவிலிருந்து முத்து சிவலிங்கம், கொழும்பிலிருந்து ஹசன் சமரசிங்க, குமாரசிங்க, குருநாகலிருந்து பண்டார, இரத்தினபுரியிலிருந்து அமைச்சர் உபதிஸ்ஸ, கேகாலையிலிருந்து மகிந்த செனிவரத்தின ஆகியோரே இவ்வாறு பதவியேற்றனர்கள்.

## எரிக் கோனேக்கர் சிலியிடம் தஞ்சம்

சோவியத் யூனியனில் தஞ்சம் அடைந்திருந்த கிழக்கு ஜேர்மனியின் முன்னாள் அதிபர் எரிக் கோனேக்கர் சிலி நாட்டுத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

# வேலைவாய்ப்பு நிறுவனம் அல்ல வெளிநாட்டு தூதரகங்கள்

— சிறிமாவோ

(கொழும்பு)

வெளிநாட்டுத் தூதரகங்கள் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் அல்ல. வேலைவாய்ப்பு வழங்குவதற்காக யாரையும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பாதீர்கள் வெளிநாட்டு உறவை "ஜொக்" ஆகவும் கருதாதீர்கள். இவ்வாறு அரசுக்கு அறிவுரை பகர்ந்தார் முன்னாள் பிரதமரும் இந்நாள் எதிர்க்கட்சி தலைவியுமாகிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா.

ஒருவர் வெளிநாட்டு தூதராகச் சென்று இரத்தினக்கல் கண்காட்சி நடத்தி இரத்தினக்கல் வியாபாரம் செய்தார். மற்றொருவர் தூதுவராகச் சென்று கோழிப் பண்ணை நடத்தினார். வெளிநாடுகளில் பிள்ளைகளைப் படிக்கவைக்க உயர்பதவிகளில் சிலர் வெளிநாட்டு தூதரகப் பதவிகளைப் பயன்படுத்தினார்கள் இப்படியான நடவடிக்கைகளால் வெளியுறவை வளர்க்க முடியுமா? இலங்கைக்கு நற்பெயரைப் பெற்றுக் கொடுக்க முடியுமா? என்ற கேள்வியையும் திருமதி பண்டாரநாயகா எழுப்பினார். வெளி

பண்டாரநாயக்க, பாடசாலை அதிபர் ஒருவர் பாகிஸ்தானுக்குத் தூதுவராகச் சென்றார் அவரால் அப்பதவியைச் சீராக நிர்வகிக்கத் தெரியவில்லை, தடுமாறினார் என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையைக் கடுமையாக விமர்சித்த முன்னாள் பிரதமர் சிறிமா, ஐ. தே. க. ஆட்சியில் ஒரு ஜனாதிபதி இந்தியாவையும் இந்திய அமைதிப் படையையும் வரவழைத்தார் மற்றொரு ஜனாதிபதி இந்தியாவையும் இந்திய அமைதிப் படையையும் வெளியேற்றினார் ஒரே ஆட்சியில் ஒரே கட்சியில் இருவேறு வெளியுறவுக் கொள்கைகளா? என வியப்புக் கலந்த குரலில் கேட்டார்.

# படுகொலைகளுக்கும் படைக்கும் தொடர்பில்லை

(லண்டன்)

மக்கள் திடீரெனக் காணாமல் போவது, விசாரணையின்றிப் படுகொலை செய்யப்படுவது போன்றவற்றிற்கு அரசாங்கப் படையே காரணம் என்பதை சிறிலங்கா அரசு ஏற்கவேண்டும் என்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் யோசனையை ஏற்க சிறிலங்கா அரசு மறுத்துவிட்டது.

லண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச

## சிறிலங்கா அறிவிப்பு

இலங்கை நிலை குறித்து விடுத்த அறிக்கையில் சில சிபாரிசுகளை ஏற்பதாக சிறிலங்கா அரசு கூறியுள்ளது.

மனித உரிமை மீறல்களைத் தவிர்க்க இந்த அமைப்பு இலங்கை அரசுக்கு தெரிவித்த யோசனைகளில் முப்பதிரண்டு சிபாரிசுகளை மட்டுமே ஏற்றுக் கொள்வதாகக் கூறியுள்ளது. இவ்வமைப்பின் தடுப்புக்காவலில் இருப்பவர்களை வெளியார் பார்வை

விதி

★ நாம் வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளில் செல்லும்போது பக்கம் பக்கமாகச் செல்வதைத் தவிர்ப்போம். ஒருவர் பின் ஒருவராக செல்வோம்.

★ பாடசாலை மாணவ, மாணவிகள் கைகோர்த்தவண்ணம் ஒருவருடன் இன்னொருவர் செல்வதைத் தவிர்ப்போம்.

★ பிரேக் இல்லாத துவிச்சக்கர வண்டிகள் ஓட்டுவதைத் தவிர்ப்போம்.

★ எமது உயரத்திற்கு ஏற்றவாறு துவிச்சக்கர வண்டியின் இருக்கைகளை சரி செய்து பயணத்தை ஆரம்பிப்போம்.

★ ஒழுங்கைகளில் இருந்து பிரதான வீதிக்கு வருகின்ற வாகனத்தை நிறுத்தி இருபக்கமும் அவதானித்த பின் பிரதான வீதிக்குள் பிரவேசிப்போம்.

★ பிரதான வீதிகளில் செல்லும்போது நாம் இடது பக்கமாகவோ அல்லது வலது பக்கமாகவோ திரும்ப வேண்டுமானால் அதற்குரிய சைகை காட்டிய பின்னர் திரும்புவோம்.

★ பாடசாலை முன்பாகவும், வைத்தியசாலைக்கு முன்பாகவும் செல்லும்போது மிகவும் அவதானத்துடனும் மெதுவாகவும் செல்வோம்.

மேற்படி வீதி ஒழுங்கு முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவினர் வீதிகளில் கடமைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கும்படி தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாக அரசியல் அவதானிகள் கூறினர். அமைச்சர் திரு தொண்டமானைச் சந்திக்கப் புலிகள் விருப்பம் தெரிவித்து அவரை யாழ் வருமாறு அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் பல விதிமுறைகளை அனுசரிப்பதற்கும், ஏனைய அரசியல் தலைவர்களுடன் கலந்தாலோசிப்பதற்கும் கால அவகாசம் தேவையாக இருப்பதால் இப்பேச்சுவார்த்தைகள் ஜனவரி நடுப்பகுதிவரை ஒத்தி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மண்ணெய்

அதேசமயம் சில தினங்களில் இவ்விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது (க)

### ஜெயலலிதா

இஸ்லாமிய யூனியன் கட்சி என்பனவற்றோடு ஜனதாதளம் உள்ளிட்ட தேசிய முன்னணியும் கண்டித்துள்ளன. இக்கட்சிகள் உடனடியாக இச்சட்டத்தை தமிழக அரசு பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும், அல்லது அரசிற்கு எதிரான உரிமைப்போராட்டம் நடாத்த வேண்டிவரும் என எச்சரித்துள்ளன.

### டடா

வரை எந்த ஒரு இலங்கைத் தமிழ் போராளிக் குழுவையும் பயங்கரவாதக்குழு என்று அரசு அறிவித்து அந்தக் குழுவிற்கு தடை விதிக்காத நிலையிலும், அதே நேரத்தில் ஒரு போராளிக் குழுவிற்கு இந்திய அரசே வடமாநிலத்திலிருந்து பாதுகாப்பு தந்திருப்பதும் இங்கு டடா சட்டம் அமுல்படுத்த எந்த முகாந்திரமும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

பெற்ற சுதந்திரமின்றிச் செயல்பட்டதே எனத் தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

தோட்டத்துறை சார்ந்த மக்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்ற இ.தொ.கா.வின் இலட்சியம் சிவலிங்கம், சென்னன் ஆகிய இருவரும் எம்.பிக்களாகியதன்மூலம் நிறைவேறுகிறது என்றும் தொண்டமான் கூறியுள்ளார்.

### சவூதி

கூடாது. புலிகளை வேட்டையாடுவதில் இந்திய தொடர்ந்தும் ஈடுபடக் கூடாது என்று எல்லாம் விரும்புவதுபோல் தெரிகிறது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளன. செக்கட்டிச் சோலை விசாரணைக்கு என்ன நடந்தது? மிச்சல் டி சொய்ஸவுக்கு என்ன நடந்தது? இங்கு நடக்கும் விடயங்களை வெளிநாடுகள் உற்றுப்பார்க்கின்றன.

சர்வதேச மாநாடுகளை இந்நாட்டின் தலைவர் தவிர்க்கிறார். முக்கிய மாநாடுகளுக்குப் பிரதமரே அனுப்படுகிறார். அவர் நல்லவர். ஆனால் அவரது புலமை எத்தகையது? இதனைக் கவனிக்க வேண்டும். இலங்கைத் தலைவர் வெளிநாட்டுத் தலைவர்களுடன் நேரடித் தொடர்பு கொள்வது அவசியம். பெக்ஸ், டெலக்ஸ் மூலம் இத்தகைய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

தாய்வான் நாட்டவர் இங்கு கொன்ஸல் ஜெனரலாகச் செயற்படுகின்றனர். அப்படியானால் ஒரே சீனா என்ற கொள்கை என்னவானது?

அமைச்சர் ஹமீத் அவர்கள் இப்பொழுது இங்கு இல்லை எனவும் தெரிவித்தார்.

முடியுமா? என்ற கேள்வியையும் திருமதி பண்டாரநாயக்க எழுப்பினார். வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்ட திருமதி

டது.

லண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச மன்னிப்பு அமையம் எனப்படும் அமைப்பு அம்னெஸ்டி இன்டர்நாஷனல்

யுள்ளது. இதன்படி நாட்டின் தடுப்புக்காவலில் இருப்பவர்களை வெளியார் பார்வையிடுவதற்கும் வழி ஏற்பட்டுள்ளது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புதிய நிர்வாக சேவைத்திட்டம் செயற்படுத்துவதில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட நிர்வாகத்தில் புதிய நிர்வாக சேவைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிர்வாகத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகங்கள் மிகவிரைவில் அனைத்து அரச திணைக்களங்களின் அலுவலகங்களையும் உள்ளடக்கிய மாவட்ட பிரதேச செயலாளர் அலுவலகங்களாக இயங்கவுள்ளன. இவ்வாறு பிரதேச செயலாளர் அலுவலகங்களில் திணைக்கள அலுவலகங்களை அமைப்பதற்கும் மேற்படி புதிய நிர்வாகச் சேவைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் வசதியாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இதில் வடகிழக்கு மாகாண உள்துறை பிரதம செயலாளர் திரு. சடாட்சர சண்முகதாஸ் அவர்களும் கலந்து கொண்டு நிர்வாகத் திட்டம் குறித்து விளக்கமளித்தார்.

மேற்படி நிர்வாகத்திட்டத்தின்படி கல்வித்திணைக்களம், சுகாதாரத்திணைக்களம் தவிர்ந்த மாகாண சபையின் கீழ் உள்ள அனைத்து அரச திணைக்களங்களினதும் அலுவலகங்கள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் செயற்படும். இந்த அலுவலகங்கள் அந்தந்தப் பிரதேசத்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பொறுப்பாகச் செயற்படுவதுடன் அப்பகுதியின் அபிவிருத்தி வேலைகளுக்கும் அரச தொடர்புகளுக்கும் பொறுப்பேற்கும். இப்பிரதேச செயலாளர் பிரிவு அலுவலகத்திற்குப் பொறுப்பாக தற்போதைய உதவி அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர் என்ற பெயருடன் கடமையாற்றுவார்.

இந்த நிர்வாகசேவை மாற்றம் யாழ். மாவட்டத்தில் மிக விரைவில் கொண்டுவரப்படவிருக்கின்றது. (ஏ)

### நிலக்கண்ணி

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட விடுதலைப் புலிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

### ஆசிரியர்களை

ஆசிரியர்களைத் தரம்பிரிக்கும்போது கல்வித்துறைச் சேவை முதிர்ச்சி ஆகியன கருத்திற் கொள்ளப்படவுள்ளன.

இப் புதிய திட்டம் பற்றி இன்னமும் ஏற்புடையதான ஒரு முடிவு எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கோயில் போரதீவில் கொள்ளையர்களைப் புலிகள் மடக்கினர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோயில் போரதீவு என்ற இடத்தில் ஆட்கள் இல்லாத வேளைகளில் வீடுகளில் புகுந்து தங்க நகைகள் போன்ற பொருள்களை மிரட்டிப் பறித்து வந்த சமூக விரோதக் கும்பல் ஒன்றை விடுதலைப் புலிகள் மடக்கிப் பிடித்துள்ளனர். விசாரணையின்போது இவர்களால் கொள்ளையிடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர். இக்கும்பலின் கொள்ளைகளுக்கு சிறிலங்கா இராணுவமும் உடந்தையாக இருந்துள்ளமை விசாரணையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### அரங்கிசை

யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக சிரேஷ்ட போதனாசிரியர்களுள் ஒருவரான பிரபல சங்கீத வித்வான் ஏ. கே. கருணாகரனின் அரங்கிசை நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.